வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி 03.01.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

உலகம் முழுவதிலும் உள்ள பௌத்த பாரம்பரிய தலங்களின் வளர்ச்சிக்கு, இந்தியா தொடர்ந்து பங்களித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

வீரமங்கை வேலு நாச்சியாரின் பிறந்த நாளை முன்னிட்டு, அவருக்கு குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் ஆகியோர், அஞ்சலி செலுத்தினர்.

இணைய குற்றங்களை எதிர்த்து போராடுவதற்கு, ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு, ஆகியவற்றை உள்ளடக்கிய, பன்முக உத்தி அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

நாட்டின் முதல் வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயிலை, மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆய்வு செய்தார்.

-----------------------------

*மோடி 1 (15)*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, புதுடெல்லியில் உள்ள ராய் பித்தோரா கலாச்சார வளாகத்தில், பகவான் புத்தர் தொடர்பான, நினைவுச் சின்னங்களின் பிரமாண்டமான சர்வதேச கண்காட்சியை திறந்து வைத்து, பகவான் புத்தர் தொடர்பான கண்காட்சியின் பல்வேறு பிரிவுகளையும் பார்வையிட்டார். அப்போது பேசிய அவர், உலகம் முழுவதிலும் உள்ள பௌத்த பாரம்பரிய தலங்களின் வளர்ச்சிக்கு, இந்தியா தொடர்ந்து

பங்களித்து வருவதாக கூறினார். அவை நவீனமயமாக்கப்பட்டு வருவதாகவும், யாத்திரிகர்களுக்காக புதிய வசதிகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

உத்தரபிரதேஷ் மாநிலம் பிப்ரவா பகுதியில் இருந்து, கடந்த 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கண்டெடுக்கப்பட்டு, 125ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டனில் தனியார் வசமிருந்த பகவான் புத்தரின் உடல் எச்சங்கள், மத்திய அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் கடந்த ஜூலை மாதம் மீட்கப்பட்டதை தொடர்ந்து, இன்று தொடங்கப்பட்டுள்ள மாபெரும் சர்வதேச கண்காட்சி குறித்த கூடுதல் தகவல்கள்....

(வாய்ஸ்)

*மோடி 2 (16)*

(வாய்ஸ்)

ஒளியும், தாமரையும், ஞானம் பெற்றவரின் நினைவுச் சின்னங்கள் என்ற தலைப்பில் தொடங்கப்பட்டுள்ள இந்த கண்காட்சியில், பகவான் புத்தருடன் நேரடியாக தொடர்புடைய, மிகவும் பழமையான, மற்றும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. உத்தரபிரதேசம், மற்றும், நேபாள எல்லையில் உள்ள சித்தார்த்த நகர் மாவட்டத்தில், பன்சி தாலுக்காவில் உள்ள பிப்ரவா என்ற சிறிய கிராமத்தில், கௌதம புத்தர் தமது 29 வயது வரையிலும் குடும்பத்துடன் வாழ்ந்த அரண்மனையில் இருந்து, வில்லியம் கிளாக்ஸ்டன் தலைமையிலான தொல்லியல் அகழ்வராய்ச்சியாளர்கள், எரிக்கப்பட்ட புத்தர் உடலின் சாம்பல், எலும்புகள், மாணிக்கம் போன்ற விலை உயர்ந்த

கற்கள், மற்றும், தங்கத் தகடுகள் போன்ற பொருட்களை கண்டெடுத்தனர். கௌதம புத்தர் பரி நிர்வாணம் அடைந்தபின், அவரது உடல் குசி நகரில் எரியூட்டப்பட்டது. அதன் சாம்பல் மற்றும் எலும்புகளின் ஒருபகுதியை பிப்ரவா கிராமத்தில் வைத்து, அதன் மீது கட்டப்பட்ட ஒரு ஸ்தூபியும், புத்த விகாரங்களும், அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டதும், பண்டைய கபிலவஸ்து நகரமே, தற்கால பிப்ரவா கிராமம் என்றும் நம்பப்படுகிறது.

மோடி 3 (5)

இந்த கண்காட்சி, புத்தரின் போதனைகளுடன், இந்தியாவின் ஆழமான மற்றும் தொடர்ச்சியான நாகரீக தொடர்பை எடுத்துக் காட்டுகிறது. மேலும், இந்தியாவின் வளமான ஆன்மீக மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதில், பிரதமரின் அர்ப்பணிப்பையும் இது பிரதிபலிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

-----------------------------

மோடி வாரணாசி (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை வாரணாசியில் தொடங்க உள்ள 72ஆவது தேசிய கைப்பந்து போட்டிகளை, காணொலிக் காட்சி மூலம் தொடக்கி வைக்கிறார். வரும் 11 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டிகளில், பல்வேறு மாநிலங்கள், மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த 58 அணிகள் கொண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் போட்டியிடுகின்றனர். போட்டிகளின் போது, இந்திய விளையாட்டு வீரர்களின் போட்டித் திறன், விளையாட்டு மனப்பான்மை, மற்றும், திறமைகளை வெளிப்படுத்தும் என்றும், தடகள விளையாட்டுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் அமையும் என்றும், கலாச்சார

மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம், வாரணாசி நகரம் ஒரு தேசிய முக்கியத்துவ மையமாக கருதப்படுகிறது.

------------------------------

*வேலு நாச்சியார்* (13)

வீரமங்கை வேலு நாச்சியாரின் பிறந்த நாளை முன்னிட்டு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர், அவருக்கு அஞ்சலி செலுத்தினர். வீரமங்கை வேலு நாச்சியார் ஒரு துணிச்சலான ஆட்சியாளர், மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர் என்றும், அவர், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக, உறுதியாக நின்று, வீரம், வியூகத் திறமை, மற்றும், விதி விலக்கான தலைமத்துவத்திற்கு உதாரணமாக திகழ்ந்தார் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், தமது சமூக ஊடகப் பதிவில் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், நல்லாட்சி, மற்றும், கலாச்சார பெருமை மீதான வேலு நாச்சியாரின் அர்ப்பணிப்பு போற்றுதலுக்கு உரியது என்றும், அவரது தியாகமும், தொலைநோக்குப் பார்வையும், பல தலைமுறைகளை தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

------------------------------

*ராஜ்நாத் சிங்* (13)

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று டெல்லி சட்டமன்றத்தில், பாரத ரத்னா அடல் பீகாரி வாஜ்பாய், மற்றும், பண்டித் மதன் மோகன் மாளவியா ஆகியோரின் உருவப் படங்களை திறந்து

வைத்தார். டெல்லி சட்டப் பேரவைத் தலைவர் திரு. விஜயேந்திர குப்தா முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பாரத மாதா என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்றையும் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டார். தேசிய பாடலான வந்தே மாதரம் இயற்றப்பட்டதன் 150ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டும், இந்திய தேசிய உணர்வை வெளிப்படுத்தும் விதமாகவும், இந்த புத்தகம் அர்ப்பணிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். அப்போது பேசிய திரு. ராஜ்நாத் சிங், இந்த இரண்டு மாபெரும் ஆளுமைகளின் பங்களிப்புகளை கௌரவிக்கும் ஒரு தருணம் மட்டுமல்ல, இது நாட்டின் நாடாளுமன்ற மரபுகள், தார்மீக அரசியல், மற்றும், தேசியவாத உணர்வை கௌரவிக்கும் ஒரு தருணம் என்றும் கூறினார்.

-----------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (8)*

நாட்டின் முதல் வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயிலை, அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆய்வு செய்தார். இந்த ரயில், இரவு நேர, மற்றும், நீண்ட தூர பயணங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர், வேகமான பயணம், சிறந்த வசதி, மற்றும், நவீன பாதுகாப்பு அமைப்புகளை உறுதி செய்வதாகவும், கூறினார். மேலும், வசதியான படுக்கைகள், தானியங்கி கதவுகள், நவீன கழிப்பறைகள் உட்பட அதிநவீன வசதிகள் கொண்ட இந்த ரயில், குவஹாத்தி-கொல்கத்தா இடையே இயக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

-----------------------------

*ஆண்டு இறுதி-தொழில் நுட்பம் 1 (3)*

இனி, அண்மையில் முடிவடைந்த 2025-ஆம் ஆண்டின் சாதனைகள் குறித்த சீர்திருத்தங்களின் ஆண்டு என்னும் நமது சிறப்புத் தொடரில், நிதித் துறையில் இந்தியா எட்டி உள்ள சாதனைகள் குறித்து, ஒரு தொகுப்பு…..

(வாய்ஸ்)

*ஆண்டு இறுதி-தொழில் நுட்பம் 2 (17)*

(வாய்ஸ்)

2025ஆம் ஆண்டில், சமத்துவம், புத்தாக்கம், தொழில்நுட்பம், மற்றும், உலகளாவிய செல்வாக்கு ஆகியவற்றில் இந்தியா அடைந்த வலுவான முன்னேற்றத்திற்காக, உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றது. உலக வங்கி, 25.5 என்ற ஜினி குறியீட்டுடன் இந்தியாவை உலகின் மிகவும் சமத்துவமான சமூகங்களில் ஒன்றாக தரவரிசைப் படுத்தியது. இது, சீனா, அமெரிக்கா, மற்றும், அனைத்து ஜி-7 மற்றும், ஜி-20 நாடுகளையும் விட, இந்தியாவை முன்னணியில் நிறுத்தியது. 2015ஆம் ஆண்டில் 19 சதவிகிதமாக இருந்து சமூக பாதுகாப்புத் திட்டப் பயனாளிகள் 2025ஆம் ஆண்டில், 64.3 சதவிகிதமாக கணிசமாக உயர்ந்துள்ளது என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பும், உலகளாவிய பாராட்டை பெற்றது. கடந்த 10 ஆண்டுகளில், 17.1 கோடிக்கும் அதிகமான மக்கள், கடுமையான வறுமையில் இருந்து மீட்கப் பட்டதன் மூலம், வறுமைக் குறைப்பு ஒரு முக்கிய சாதனையாக அமைந்தது. யுனெஸ்கோ அங்கீகாரங்கள், மற்றும், உலகளாவிய புத்தாக்க குறியீட்டில், 38ஆவது இடத்திற்கு முன்னேறியதன் மூலம், இந்தியாவின் கலாச்சார, மற்றும், புத்தாக்க நிலையும் மேம்பட்டது.

-----------------------------

*அமத் □ ா-அந்தமான்* (15)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, 3 நாள் பயணமாக அந்தமான் சென்றுள்ளார். அந்தமான் நிக்கோபர் தீவுகளில் இன்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில், உள்துறை அமைச்சகத்தின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தேசிய பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, இணைய பாதுகாப்பு, மற்றும், பிராந்திய உள்கட்டமைப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப் பட்டன. அப்போது பேசிய அமைச்சர், இணைய குற்றங்களை எதிர்த்து போராடுவதற்கு, ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு, திறன் ஆகியவற்றை உள்ளடக்கிய, பன்முக உத்தி அவசியம் என்று வலியுறுத்தினார். போர்ட் பிளேயர் என்று அழைக்கப்பட்ட தற்போதைய ஸ்ரீவிஜயபுரத்தில் உள்ள ஐடிஎஃப் மைதானத்தில், நவீன் நியாய சன்ஹிதா குறித்த கண்காட்சி ஒன்றையும் திரு. அமித் ஷா தொடக்கி வைத்து, நேதாஜி மைதானத்தில், பல்வேறு திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார். கடந்த 1 மாதத்திற்குள் திரு. அமித் ஷா அந்தமானுக்கு மேற்கொள்ளும் 2ஆவது பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*அமித் □ ா வாழ்த்து* (9)

பெண் கல்வி, மற்றும், சமூக சீர்திருத்தங்களின் முன்னோடியான சாவித்ரிபாய் பூலேயின் பிறந்தநாளை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பெண்களுக்கு, கல்வி பெறும்

அடிப்படை உரிமையை பெற்றுத் தந்ததுடன், பெண்களுக்காக நாட்டின் முதல் பள்ளியை நிறுவியவர் அவர் என்றும், சமூக தீமைகளை எதிர்த்து போராடி, சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட சாவித்ரிபாய் பூலேவின் உத்வேகம் தரும் வாழ்க்கை, தேசத்தை கட்டமைப்பதில் எப்போதும் வழிகாட்டும் ஒளியாக திகழும் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

-----------------------------

குடியரசு தினம் (19)

புதுடெல்லியில் இந்த ஆண்டு நடைபெற உள்ள குடியரசு தின அணிவகுப்பில், நாடு முழுவதிலும் இருந்து, 898 பெண்கள் உட்பட, மொத்தம் 2 ஆயிரத்து 406 என்சிசி கேடட்கள் பங்கேற்க உள்ளதாக, என்சிசி இயக்குநர் ஜெனரல், லெப்டினென்ட் ஜெனரல் வீரேந்திர வாட்ஸ் தெரிவித்துள்ளார். முந்தைய ஆண்டை விட, அனைத்து மாநிலங்களில் இருந்தும் பங்கேற்கும் பெண் கேடட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், அவர் கூறினார். ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கில் இருந்து 127 கேடட்கள் வடகிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த 131 கேடட்கள், மேலும், இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் 25 நட்பு நாடுகளைச் சேர்ந்த கேடட்டுகள், மற்றும், அதிகாரிகள் இந்த அணிவகுப்பில் பங்கேற்க உள்ளனர் என்றும், அவர் தெரிவித்தார். குடியரசு தின அணிவகுப்பின் போது, துப்பாக்கி சூடு, மற்றும், பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் பங்கேற்பார்கள் என்றும், இம்மாதம் 28ஆம் தேதி பிரதமரின் பேரணியுடன் அணிவகுப்பு நிறைவடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த ஆண்டு

நிகழ்வுக்கான முகாம், கடந்த மாதம் 30ஆம் தேதி தொடங்கப்பட்டதாகவும், லெப்டினென்ட் ஜெனரல் வீரேந்திர வாட்ஸ் தெரிவித்துள்ளார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் பொது 75 ஆயிரம் கேடட்கள் சிவில் படையினருக்கு உதவும் வகையில் நிறுத்தப் பட்டனர் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

-----------------------------

*இசை நிகழ்ச்சி* (6)

திருவையாற்றில் சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 179-ஆவது ஆராதனை விழா இன்று தொடங்குகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான பஞ்சரத்ன கீர்த்தனை பகுல பஞ்சமி தினமான வரும் 7-ம் தேதி நடைபெற உள்ளது. மேலும், அன்று காலை 9 மணியளவில் ஆயிரக்கணக்கான இசைக் கலைஞர்கள், பாடகர்கள் கலந்து கொண்டு ஒரே குரலில் பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாடி, தியாகராஜ சுவாமிக்கு இசை அஞ்சலி செலுத்த உள்ளனர்.

-----------------------------

*வானிலை* (9)

டெல்லி, ஹரியானா, பஞ்சாப், சண்டிகர், மற்றும், உத்தரபிரதேஷ் ஆகிய மாநிலங்களில், வரும் 9ஆம் தேதி வரை, அடர் மூடுபனி நிலவும் என்பதால், அப்பகுதிகளுக்கு ரெட் அலர்ட் விடுக்கப் படுவதாக, இந்திய வானிலை ஆய்வுத் துறை எச்சரித்துள்ளது. டெல்லி தேசிய தலைநகர் பிராந்தியத்தில் நிலவிய அடர்ந்த பனிமூட்டம் காரணமாக, பல விமானங்கள், மற்றும், ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில், 72 விமானங்கள் ரத்து செய்யப்

பட்டதாகவும், சுமார் 8 ரயில்கள், 3 மணி நேரத்திற்கும் மேலாக தாமதமாக இயக்கப் பட்டதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகம் முழுவதிலும் உள்ள பௌத்த பாரம்பரிய தலங்களின் வளர்ச்சிக்கு, இந்தியா தொடர்ந்து பங்களித்து வருவதாக பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

வீரமங்கை வேலு நாச்சியாரின் பிறந்த நாளை முன்னிட்டு, அவருக்கு குடியரசுத் துணைத் தலைவர் பிரதமர் ஆகியோர், அஞ்சலி செலுத்தினர்.

இணைய குற்றங்களை எதிர்த்து போராடுவதற்கு, ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு, ஆகியவற்றை உள்ளடக்கிய, பன்முக உத்தி அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

நாட்டின் முதல் வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயிலை, மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆய்வு செய்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது